இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 11-07-2025

# ‘முழு சங்கி’ பழனிசாமி!

‘முழு சங்கி’யாகவே மாறிவிட்டார் பழனிசாமி. பா.ஜ.க.வை அவர் தள்ளிவைத்ததாகச் சொன்னது எல்லாம் நாடகம் என்று சொல்லத்தக்க வகையில் பேசத் தொடங்கி இருக்கிறார் பழனிசாமி.

“பா.ஜ.க.வுடன் 2026 ஆம் ஆண்டு மட்டுமல்ல; 2032 ஆம் ஆண்டும் கூட்டணி இல்லை” என்று பழனிசாமி சொல்லி வந்தார். ‘அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி, விஜயபாஸ்கர் என பெரும்பாலானவர்கள் பா.ஜ.க.வினராக மாறிவிட்டார்கள். ஆனால் பழனிசாமிதான் அதற்கு இடையூறாக இருக்கிறார்’ என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது பழனிசாமி பேசுவதைப் பார்த்தால், ‘முழுமுதல் சங்கி’ இவர் தான் என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

**மக்களைச் சந்திக்கும் நடைபயணம் போகப் போவதாக முதலில் சொன்னார் பழனிசாமி. ‘புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டதைப் போல’ இருந்தது அந்த அறிவிப்பு. ஐந்து முதல் பத்து கிலோ மீட்டர் தூரம் வரை மக்கள் தலைகளுக்கு நடுவில் நடந்து செல்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதே போல மக்கள் தனக்கும் நிற்பார்கள் என்று நினைத்தார் பழனிசாமி. அவர் தனக்கு செல்வாக்கான பகுதியாக நினைக்கும் கோவை மண்டலத்தில் கூட அதனைப் பார்க்க முடியவில்லை. பத்து நிமிடம் நடந்து விட்டு, பஸ் ஏறிவிட்டார் பழனிசாமி. ‘நடைபயணம்’ இப்போது ‘பஸ் பயணம்’ ஆகிவிட்டது.சில இடங்களில் வண்டியை நிறுத்தி பேசிவிட்டு, அவரது வாகனம் சென்று விடுகிறது. வழக்கமாக சாலையில் ஆம்னி பஸ் போவதைப் போலத் தான் பழனிசாமி பஸ்ஸும் போய்க் கொண்டிருக்கிறது.**

**அவர் தனது வாகனத்தை நிறுத்தி பேசும் இடங்களிலும் மக்கள் நின்று கேட்பது இல்லை. பேசத் தொடங்கியதும் கலைந்து விடுகிறார்கள். சாலைகளில் போய்க் கொண்டிருப்பவர்களும் நின்று கேட்பதும் இல்லை. இவை அனைத்தும் பழனிசாமியை ஆத்திரம் கொள்ள வைக்கிறது. எனவே வாய்க்கு வந்ததை பேசிக் கொண்டிருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவனை விமர்சிக்கிறார். பொதுவுடமை இயக்கங்களை விமர்சிக்கிறார் பழனிசாமி.**

‘நாங்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால் தி.மு.க.வுக்கு என்ன?’ என்று கேட்கும் பழனிசாமி, தி.மு.க. கூட்டணி இருக்கும் கட்சிகளை எதற்கு விமர்சிக்க வேண்டும்? அந்தளவுக்கு முனை மழுங்கி விட்டது பழனிசாமிக்கு.

இதுவரை பா.ஜ.க.வை தனக்கு வேண்டாத கட்சி போல நடித்துக் கொண்டிருந்த பழனிசாமி முகத்தை கிழித்திருக்கிறது இந்தப் பயணம். அவரது பயணத்தைத் தொடங்கி வைக்க பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனும் ஒன்றிய அமைச்சர் எல்.முருகனும் வந்தார்கள். ‘பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி’ என்று புகழத் தொடங்கினார் பழனிசாமி. அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி இயல்பானதுதான் என்றும் சொல்லி விட்டார் பழனிசாமி. நேற்று வரை கசப்பான கட்சியாக இருந்த பா.ஜ.க., இன்று இயல்பானதாக மாறியதற்கு என்ன காரணம் என்பதை மக்கள் மன்றத்தில் பழனிசாமி சொல்ல வேண்டாமா?

“தமிழ்நாட்டுக்கு நன்மை செய்யக் கூடிய பல்வேறு திட்டங்களை வழங்கி வரும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பதில் என்ன தவறு?” என்று கேட்கிறார் பழனிசாமி. பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்கிறது என்று பட்டியல் போட்டிருக்க வேண்டாமா பழனிசாமி? அவர் தான் பக்கம் பக்கமாக எடுத்து வருபவர் தானே? எடுத்து வந்து சொல்லலாமே?

மத்தியில் வலுவான ஆட்சி நடக்கிறதாம். பழனிசாமி சொல்கிறார். மைனாரிட்டி பா.ஜ.க. ஆட்சியை, நிதீஷ்குமார் – சந்திரபாபு ஆதரவுடன் மோடி நடத்தி வருகிறார் என்பது பழனிசாமிக்குத் தெரியுமா?

**பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி என்பது மக்களுக்கு நன்மை செய்யும் கூட்டணியாம். அ.தி.மு.க. ஆட்சி, பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை பாழ்படுத்திய ஆட்சி. பா.ஜ.க. ஆட்சி, பத்தாண்டுகளாக தமிழ்நாட்டை பழிவாங்கிக் கொண்டிருக்கும் ஆட்சி. இவர்கள் இருவரும் சேர்ந்திருப்பது, ‘தமிழ்நாட்டின் இரண்டு துரோகிகள்’ சேர்ந்து அமைத்துள்ள கூட்டணி என்றே மக்கள் சொல்கிறார்கள்.**

தமிழ்நாட்டுக்கு நன்மை செய்யாத, திட்டங்கள் தராத பா.ஜ.க.வை தான் முதலமைச்சராக இருந்தபோது தட்டிக் கேட்கவில்லை பழனிசாமி. மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து வேளாண் பெருமக்களை நிலத்தில் இருந்து அப்புறப்படுத்த பா.ஜ.க. துடித்த போது மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தவர் பழனிசாமி. ‘இது நல்ல சட்டம் தான்’ என்று சொன்னவர் பழனிசாமி. குடியுரிமை சட்டத்தின் மூலமாக இசுலாமியர்களும், இலங்கைத் தமிழர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிந்த பிறகும், அந்த சட்டத்தை ஆதரித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் வாக்கு செலுத்தியது பழனிசாமியின் அ.தி.மு.க.

‘நீட்’ தேர்வால் பல மாணவர்கள் தூக்கில் தொங்கிய போது, ‘நீட் தேர்வை இனி எல்லாரும் எழுதித்தான் ஆக வேண்டும்’ என்று நாக்கைத் துருத்திக் கொண்டு சொன்னவர் பழனிசாமி. பா.ஜ.க.வின் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டார். இந்தியைத் திணிக்கும் போது தலையாட்டிக் கொண்டிருந்தார். இந்திக்கு ஆதரவாக அமித்ஷா கருத்துச் சொல்லும் போதெல்லாம், ‘அது அவரது சொந்தக் கருத்து’ என்று சொன்னார். பெரியாரை, அண்ணாவைக் கொச்சைப்படுத்தி நடத்தப்பட்ட மாநாட்டுக்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களை அனுப்பி ஆதரவு தெரிவித்தார். இப்போது இந்து சமய அறநிலையத் துறையையே விமர்சிக்கத் தொடங்கிவிட்டார் பழனிசாமி.

பா.ஜ.க.வுடன் பழனிசாமி கூட்டணி வைக்கவில்லை. அவரே பா.ஜ.க.வாக ஆகிவிட்டார். சங்கியாக மாறிவிட்டார்.

**பா.ஜ.க.வுடன் சம பந்தியில் உட்கார, சம்மந்திக்கு தரப்பட்ட நெருக்கடிதான் காரணம் என்பதை பழனிசாமியால் வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டாலும் அ.தி.மு.க.வினர் அறிவார்கள். பழனிசாமியின் பேச்சால் தலை குனிந்து நிற்பவர்கள் அவர்கள்தான்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2025) திருவாரூர் மாவட்டம், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதிக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களிடம் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன், நாகை மாலி, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2025) திருவாரூர் மாவட்டம், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதிக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களிடம் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன், நாகை மாலி, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.7.2025) நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.எஸ்.மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கமுதியில்

## கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

கமுதி, ஜூலை 11–

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நேற்று மாலை 5000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பேறிஞர் அண்ணா திடலில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் செய்திருந்தார். மேலும் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார் விழாவிற்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி முன்னிலை வகித்தார். கழக கொள்கை பரப்புச் செயலாளர் ஐ.லியோனி மற்றும் கழக வழக்கறிஞரணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, சுந்தரராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பொதுமக்களுக்கான அசைவ அன்னதானத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்தார். விழாவில் கழக மூத்த முன்னோடிகள் 102 பேருக்கு பொற்கிழி வழங்கப்பட்டது.

விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரம், 5000 ஏழை எளியோருக்கு வேஷ்டி, சேலைகள், சலவை தொழிலாளர்களுக்கு இஸ்திரி பெட்டி, சிகை அலங்காரக் கலைஞர்களுக்கு உபகரணங்கள் மற்றும் மரக்கன்று வழங்கப்பட்டது. விழாவில் 10 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.மேலும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் செய்திருந்தார்.

